**செய்தி வெளியீடு எண்: 951** **நாள்: 27.10.2010.**

## <u>சென்னையில் உலக சிக்கன நாள் விழா</u>

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 30ஆம் நாளன்று உலக சிக்கன நாள் விழா நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. சிக்கனத்தின் மேன்மையை உணர்த்திடும் பொருட்டும், சேமிக்கும் பழக்கத்தை வளர்த்திடும் பொருட்டு இவ்விழா கொண்டாடப்படுகிறது.

வருகிற 30.10.2010 **அன்று மாலை** 03.30 **மணியளவில் சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி அரங்கில் மாண்புமிகு மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழு துணைத் தலைவர் திரு.அ.இரகுமான்கான் அவர்கள் தலைமையில், உலக சிக்கன நாள் விழா** நடைபெறுகிறது.

மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு விழாப் பேரூரையாற்றி பரிசுகள் வழங்க உள்ளார்.

இவ்விழாவில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்ரமணியன், மாமன்ற உறுப்பினர் திரு.ஆளூர் மஜீத், சென்னை மண்டல அஞ்சல் துறைத் தலைவர் திரு.எம்.எஸ்.இராமானுஜன், தேசிய சேமிப்பு பயிற்சி நிறுவன மண்டல இயக்குநர் திரு. டி.தாசரி மற்றும் எத்திராஜ் மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி. எம். தவமணி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

விழா துவங்கும் முன் பள்ளி / மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத் துறை இயக்குநர் திரு.த.உத்திரகுமாரன்,இ.ஆ.ப., வரவேற்புரை நிகழ்த்திடவும், திரு.எம்.நாகராஜன், துணை இயக்குநர் நன்றியுரையாற்றிடவும் உள்ளார்.

இவ்விழாவில் அனைத்து சிறுசேமிப்பு முகவர்களும், முதலீட்டாளர்களும், பொதுமக்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு:—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**